மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அந்த வழித்தடங்களில் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, உரிய பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 347, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

347—

ஆயுர்வேத மற்றும் யோகாசனப் பிரிவுகள்

***19893—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும் ஆயுர்வேத மற்றும் யோகாசனப் பிரிவுகளைத் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.த. செல்லபாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஆயுர்வேதப் பிரிவுகள் மற்றும் யோகாசனப் பிரிவுகளைத் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். இன்றைய தினம், தொழிலாளர்களுடைய விடிவெள்ளியாய், தொழிலாளர்களின் குடும்ப விளக்காய் நிலைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலே, மே தினத்தைக் கொண்டாடுகின்ற வகையிலே, இன்றைக்குத் தொழிலாளிகளுக்கு வாரி, வாரி வழங்கக்கூடிய கொடை வள்ளலாக அம்மா அவர்கள்

நிறைந்து கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, இன்றையதினம் மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மூன்று மருத்துவமனைகளிலும் ஏற்கெனவே யோகாசனப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. சிவகாசி, திருச்சி, சேலம், வேலூர் மற்றும் ஓசூர் ஆகிய 5 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் யோகாசனப் பிரிவுகள் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 8-12-2011 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஏற்கெனவே ஆயுர்வேதப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள, திருச்சி, சேலம், வேலூர், ஓசூர் மற்றும் சிவகாசி ஆகிய ஐந்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஆயுர்வேதப் பிரிவுகளை 2013 ஆம் ஆண்டில் துவக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் சிறந்த பதிலுக்கு நன்றி. என்னுடைய கேள்வி, ஏற்கெனவே இயங்கி வந்தாலும், யோகா மற்றும் ஆயுர்வேதப் பிரிவுகளுக்குரிய கட்டடங்கள் நவீன வசதிகளுடன் அமைக்க அரசு முன்வருமா என்பதைத்தான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.த. செல்லபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களின் பொற்காலம் என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியைத்தான் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் அந்த*

அளவிற்கு இந்த இரண்டு ஆண்டு காலத்தில் மட்டும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் யோகாசனப் பிரிவுகள் ஐந்தும், இருபது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் எட்டும், அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஆயுர்வேதப் பிரிவுகள் மூன்றும், அரசு மருத்துவமனைகளில் ஓமியோபதி பிரிவுகள் மூன்றும், யுனானி பிரிவு மூன்றும் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியாளர்கள் ஐந்தாண்டு காலத்தில் மொத்தமே மூன்று யோகாசனப் பிரிவுகளும், ஆறு சித்த மருத்துவப் பிரிவுகளும்தான் துவக்கி வைத்திருந்தார்கள். ஆனால், இன்றையதினம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வசதி படைத்தவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அந்த மருத்துவ வசதி, ஏழையெளிய தொழிலாளிகளுக்கும் கிடைக்க வேண்டுமென்கிற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான், இன்றைக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையிலும் சரி, மருத்தகத்திலும் சரி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய தலைமையில் ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பொற்கால அரசு சிறப்பாக தொழிலாளிகளுக்கு நல்லதொரு வைத்தியம் கிடைக்கிற அளவிற்கு செய்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுர்வேதம் மற்றும் யோகா பிரிவுகளுக்கான மருத்துவர்கள், தொடர்பான பணியாளர்கள் மற்றும் நவீன கருவி வசதிகள் உட்பட ஒதுக்கீடு செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, அதுபோன்று சிறப்பம்சம் மிகுந்த மருத்துவர்களை நியமிக்க வேண்டுமானால், கண்டிப்பாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு

2013 ஏப்ரல் 29]

பரிசீலித்து செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 348, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

348—

மாணவர் விடுதி

*8188—திரு. மு. ரெத்தினசாமி:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முகம்மதுஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள். திருவையாறில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

திரு. மு. ரெத்தினசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். 'அம்மா' நீங்கள்தான் எங்களுக்கு மாதா, (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்தான் எங்களுக்கு குரு, (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்தான் எங்களுக்கு தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அம்மா அவர்களை வணங்குகிறேன்.